இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், “இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்” என்றார். தோமா அவரைப் பார்த்து, “நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!” என்றார். இயேசு அவரிடம், “நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்” என்றார். (‘யோவான் 20: 26-29)

# 'துணிவோடிருங்கள், உயிர்ப்பின் மகிழ்வை அறிவியுங்கள்'

## திருத்தந்தை வலியுறுத்து!

**வத்திக்கான்:** "அஞ்சாதீர்கள்" என, உயிர்த்த ஆண்டவர் உரைத்த நம்பிக்கையூட்டுகின்ற மற்றும், அச்சம் தவிர்க்கின்ற வார்த்தைகளை நம் இதயங்களில் பதிப்போம் என்று திருப்பயணிகளை ஊக்கப்படுத்தினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருவிழாவுக்கு அடுத்த நாளாகிய, ஏப்ரல் 18, இத்திங்கள் நண்பகலில் வத்திக்கானின் தூய பேதுரு வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான திருப்பயணிகளுக்கு, அல்லேலூயா வாழ்த்தொலி உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உண்மை நமக்கு விடுதலை அளிக்கும் என்பதற்குச் சாட்சிகளாக, இயேசுவின் உயிர்ப்பின் மகிழ்வைப் பகிர்ந்துகொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.



அன்று விடியற்காலையில், இயேசுவின் கல்லறையைப் பார்க்கச் சென்ற பெண்கள், அவர் உயிர்த்துவிட்ட செய்தியை சீடர்களுக்கு அறிவிக்க ஓடியபோது, உயிர்த்த இயேசு அவர்களை எதிர்கொண்டு அவர் களிடம்,"அஞ்சாதீர்கள்" (மத்.28:8-15) எனக் கூறியதை விளக்கும் நற்செய்தி வாசகத்தை மையப்படுத்தி, அன்றைய உரையை வழங்கினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

### "அஞ்சாதீர்கள்"

மரணம், நோய், வாழ்வின் இன்னல்கள் போன்ற எதுவானாலும், அவை குறித்த அச்சம் எவ்வாறு நம்மை முடக்கிப் போடும் என்பதை, "அஞ்சாதீர்கள்" என்ற ஆறுதலளிக்கும் சொல்லாடல் ஏற்க வைக்கின்றது என்றுரைத்த திருத்தந்தை, மரணத்தை வென்ற இயேசுவைத் தவிர, வேறு யாரால், இத்தகைய நம்பிக்கையளிக்கின்ற சொல்லாடலை நம்மிடம் கூறமுடியும் என்ற கேள்வியை எழுப்பினார்.

அச்சம், எவ்வாறு இதயக் கதவுக்குள் நம்மை எப்போதும் மறைத்து வைத்திருக்கின்றது என்பதை முழுவதும் அறிந்தவர்களாய், நம் அச்சங்கள் என்ற கல்லறையிலிருந்து வெளிவர ஆண்டவர் அழைக்கிறார் எனவும், அதேநேரம், அவர் என்றென்றும் நம்முடனிருக்கிறார் என்பதை அனுபவிக்க நம்மை அனுமதிக்கவேண்டும் எனவும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

### விரைந்து செல்லுங்கள், மற்றவருக்கு அறிவியுங்கள்

“என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்” என, இயேசு அப்பெண்களிடம் கூறினார், நாமும் நம்மைச் சூழ்ந்துள்ள அச்சத்தை அகற்றி, ஆண்டவரின் உயிர்ப்பால் வரும் பெருமகிழ்ச்சியை, மற்றவருக்கு

# ஈப்போ சாலை, உயிர்த்த ஆண்டவர் பங்கில் ஆண்டுத் திருவிழா கொண்டாடப்பட்டது

கோலாலம்பூர், ஈப்போ சாலையில் உள்ள உயிர்த்த ஆண்டவர் பங்கு அதன் பங்குத் திருவிழாவை பாஸ்கா ஞாயிறு அன்று கொண்டாடியது. இந்த ஆண்டு, குருத்து ஞாயிறு தவிர்த்து பாஸ்கா புனித வாரத்தில் முப்பெரும் நாள்களான திங்கள், செவ்வாய் மற்றும் புதன் மூன்று நாள் வழிபாட்டு பங்குத் திருவிழா மையமாகக் கொண்டிருந்தது. பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்ட பாஸ்கா ஞாயிறு



திருப்பலியுடன் பங்குத் திருவிழா நிறைவு பெற்றது.

திங்கள் முதல் புதன் வரையிலுமான திருப்பலிகள் அனைத்தும் அருள்தந்தை லோரன்ஸ் என்ரூ அவர்களால் தலைமையேற்கப்பட்டது. அவர் ஒன்றித்த பயணம் தலைப்பில் ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைத்தூது ஆகிய கருத்தோட்டங்கில் அவரது பகிர்வை சிறப்பாக பகிர்ந்துகொண்டார்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து பங்கின் பங்குத்தந்தை அருள்தந்தை எட்வின் பீட்டர் அவர்கள், ஒவ்வொரு நாளும் வழிபாட்டுத் தயாரிப்பில் சமூகத்தின் பங்களிப்பின் அவசியத்தை எடுத்துரைத்ததால், கொண்டாட்டம் உண்மையிலேயே ஒரு சமூக மையமாக இருந்தது. ஒவ்வொரு நாளின் வழிபாட்டு விழாவிற்கும் அனைத்து பங்கக் பணிக்குழுக்களையும் உள்ளடக்கியதாக இருந்தது - அனைத்து அ.தி.சமூகங்கள், மறைக்கல்வி பணிக்குழு, சமூக தொடர்பு பணிக்குழு, இறைவழிபாட்டு குழு, இளைஞர்கள், கிழக்கு மலேசிய சமூகம் மற்றும் இந்த பங்கின் தவறாமல் திருப்பலிகளில் கலந்து கொள்ளும் அனைவரின் பங்கேற்பும் சிறப்பாக அமைந்தது என்று பெருமிதம் கொண்டார்.

பங்கின் ஒருங்கிணைந்த மனிதவள பணிக்குழுவின் முயற்சியல் மேற்கொள்ளப்பட்ட ஹேம்பர் முயற்சியின் மூலம் கிடைந்த நிதியின் மூலம் ஏழைகளும் இக்கொண்டாட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் என்பது குறிப் பிடத்தக்கது. ஏறக்குறைய அனைத்து தயாரிப்புக் கூட்டங்களும் இயங்கலை வாயிலாக (ஆன்லைனில்) நடத்தப்பட்டன.

பங்குத்தந்தை எட்வின் பீட்டர் அவர்தம் உரையில் சமூகப் பங்கேற்பு முழுமையாக இல்லை என்றாலும் அது ஆற்றலுடன் பங் கேற்றது என்றார். மூன்று நாள்களிலும் நல்ல பங்கேற்பு இருந்தது என்றும், அர்ப்பணிப்புள்ள தன்னார்வலர்களின் பணிக்குழு நிர்ணயிக்கப் பட்ட நடைமுறை பாதுகாப்பு விதிமுறைகளைள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தது என்றும் கூறினார்.

# வயது முதிர்ந்தோர், அன்புகூரப்பட்டு, மதிக்கப்பட வேண்டும்!

இரு வருடங்களுக்குப்பின், வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் முதன்முறையாக நடைபெற்ற புதன் மறைக்கல்வியுரையில், வயதுமுதிர்ந்தோரை மதித்தல், வாழ்வு மற்றும், அதன் பலநிலைகளை இளையோருக்குக் கற்றுக்கொடுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார்

அன்புச் சகோதரர், சகோதரிகளே, உங்கள் எல்லாருக்கும் காலை வணக்கம். இன்று, இறைவார்த்தையின் உதவியோடு, முதுமையின் வலுவற்ற இயல்பு, குறிப்பாக, குழப்பம், மற்றும், மனச்சோர்வு, இழப்பு மற்றும், கைவிடுதல், ஏமாற்றம் மற்றும், சந்தேகம் ஆகியவற்றால் குறிக்கப்பட்டுள்ள ஒரு பகுதியைத் திறக்கின்றோம்.

வாழ்க்கையில் நாம் எதிர்கொள்கின்ற சூழல்களுக்குமுன், சில நேரங்களில் துயர நிகழ்வுகளுக்குமுன், நாம் உணர்கின்ற இயலாமை, எந்தக்கட்டத்திலும் ஏற்படலாம். இருந்தபோதிலும், குழந்தைப் பருவம் மற்றும், இளமைப் பருவத்தில் ஏற்பட்ட ஆழமான மனக்காயங்கள், முதுமையில், அநீதி மற்றும், எதிர்ப்புக் குணத்தைத் தூண்டிவிடலாம். இது மற்றவருக்குத் தொந்தரவாகக்கூட இருக்கலாம். மேலும், வாழ்க்கையில் துயரநிகழ்வுகளை எதிர்கொள்கின்றபோது உணரப்படும் இயலாமை, இளையோரிடம் உருவாகும்போது, வலுவான எதிர்விளைவை மட்டுமே தூண்டிவிடுவதாகத் தெரிகின்றது. இதில், பெற்றோர் மற்றும், வயதுமுதிர்ந்தோரால் இளைய தலைமுறைகளுக்கு, கைம்மாறு கருதாமல் வழங்கப்படும் அன்பாகப் பார்ப்பதே நம் பொதுவான அனுபவமாக இருக்கிறது. எனினும், நமக்கு முன்னே வாழ்ந்தவர்களை மதித்து, மற்றொரு முறையில் அன்புகூர்வது பற்றி இறைவெளிப்பாடு நமக்குக் காட்டுகிறது. இந்த சிறப்பு அன்பு, பத்துக் கட்டளைகள் வழியாக, கடவுளால் நமக்குப் புனிதமானதாக ஆக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டளை, ஒருவர், தன் தந்தை, தாயோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல், நமக்குமுன் வாழ்ந்த தலைமுறையினர் அனைவரையும் உரித்தானவர்களாக நினைக்கவேண்டும் என்று கூறுகிறது. வயதுமுதிர்ந்தோர் மீது கொண்டிருக்கும் நன்மதிப்பு, அவர்களின் உடல் மற்றும், மனநிலையைப் பொருட்படுத்தாமல் இருக்கவேண்டும் என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது. இக்காலத்தில் வயதுமுதிர்ந்தோரைப் பராமரிப்பதற்கு வழங்கப்படுகின்ற வசதிகளுக்கு மத்தியில், சிறப்பான முறையில் அவர்களுக்குக் கொடுக்க கடமைப்பட்டுள்ள அன்பையும் நன்மதிப்பையும் வழங்குவதற்கு நாம் முயற்சிக்கவேண்டும் என்றார் திருத்தந்தை

# பாஸ்கா திருவிழிப்பில் திருமுழுக்குப்பெற்ற புதுக்கிறிஸ்தவர்களின் உள்ளார்ந்த பகிர்வு

**Rena Banu @ Jenny Maria, புனித யாகப்பர் பங்கு, மெர்லிமாவ், ஜொகூர்.**



எனக்கு திருமுழுக்கு வழங்கப்பட்ட போது மனதிற்குள் மகிழ்ச்சி, பூரிப்பு ஒன்றாக இணைந்து இருந்தது. எனக்கு மொத்தம் நான்கு அருட்சாதனங்கள் கிடைத்தது. தூய ஆவியாரின் ஆற்றல் என் மேல் பொழிந்ததை முழுமையாக உணர்ந்தேன். இனிமேல் என் கிறிஸ்துவ கடமையை முழுமையாக செய்வேன் என்று அந்த நேரத்தில் நான் உறுதி ஏற்றேன்.

**Jenny Vishalini A/P Malayapan, தூய ஆவியார் பங்கு, ஜாசின், மலாக்கா**



என் வாழ்வில் விஷாலினி என்று இருந்த நான் ஜெனி விஷாலினி என்று பெயர் மாற்றம் கண்டது முழு திருப்தியாக உள்ளது. நான் ஒரு இந்து பெண்ணாக இருந்து கிறிஸ்தவ பெண்ணாக மாறிய போது என் ஈடுபாடு கடவுள் மீது முதலில் அதிகமாக இருந்ததில்லை. என் வாழ்வில் என் கணவர் ஜேம்ஸ் அவர்களை சந்தித்த தினத்திலிருந்து என்னுள் இருந்த மாற்றத்தை உணர்ந்தேன். கிறிஸ்துவையும் கத்தோலிக்க வழிபாடு அமைதியான இறைவேண்டல் எனக்கு மிகவும் பிடிக்கும். நான் கிறிஸ்துவுக்குள் நுழைந்த அன்று எனக்குள் மன அமைதி மிகவும் இருந்ததோடு முழு மகிழ்வும் இருந்தது. அந்த திருத்தைலமானது என் நெற்றியில் பூசிய போது எனக்கு அமைதியுடன் கூடிய ஆர்வமும் சந்தோஷத்துடன் கூடிய அழுகை வந்தது. அது எனக்கு ஒரு மறக்கமுடியாத நிகழ்வாக இருந்தது. எந்த தடை வந்தாலும் அதனை தாங்கிக் கொண்டு சாதனையாக மாற்றுவேன் என்ற நம்பிக்கையுடன் நான் ஒரு முழு கிறிஸ்தவ பெண்ணாக இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

**Divya, திருக்குடும்பப் பங்கு, காஜாங், சிலாங்கூர்**



நான் திருமுழுக்கு பெற்ற பிறகு, மகிழ்ச்சி, பரவசம் மற்றும் பேரின்பத்தில் கடவுளின் அன்பில் நெருக்கமான உறவை உணர்ந்தேன். இறைவனின் அருளால் புதிய பயணத்தைத் தொடங்க நான் உற்சாகமாக இருக்கிறென். எனக்கு கிறிஸ்தவ விசுவாசத்தைபு பயிற்றுவித்த R.C.I.A. குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Alice திருக்குடும்பப் பங்கு, காஜாங், சிலாங்கூர்**



நான் திருமுழுக்குப் பெற்ற பிறகு, என்னை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்துள்ளேன் என்பதை அறிந்தப்பின் பாதுகாப்பு, மகிழ்ச்சி மற்றும் பேரின்ப உணர்வை என்னுள் உணர்ந்தேன். இறைவனின் வருகையினால் என் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கடவுள் என்னை இறை வாழ்க்கையில் செழிக்க வைத்துள்ளார். கிறிஸ்துவின் ஆயிரக்கணக்கானா படிகள் நிறைந்த வாழ்க்கை பயணத்தில் முதல் படி இந்த திருமுழுக்கு. இறைவனை பற்றிக்கொண்டு என் வாழ்வின் இலக்கை அடைவேன்.

**Shangita Anne, கிறிஸ்து அரசர் பங்கு, சுங்கை பட்டாணி, கெடா.**



நான் சங்கீதா என். புதுமுக முதியோர் மறைக்கல்வி வகுப்பில் (RCIA) கத்தோலிக்க நம்பிக்கை வாழ்வை கற்றேன். பாஸ்கா திருவிழிப்பில் திருமுழுக்குப் பெற்றேன். அந்த நேரத்திற்கு மிகவும் எதிர்பார்ப்போடு காத்திருந்தேன். இந்த விசுவாசப் பயணத்தின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்கிறேன்.

என் வருங்கால கணவர் ஒரு கத்தோலிக்கர் என்பதனால் அவர் மூலம் கத்தோலிக்க கிறிஸ்துவ வாழ்வுமுறைப் பற்றி அறிந்து கொண்டேன் . கத்தோலிக்கராவதின் வழி எங்கள் வாழ்வில் ஏற்படும் திருப்புமுனையை அவர் எடுத்துரைத்தார்.

ஆரம்பக் கட்டத்தில் இம் மதத்தை பற்றி ஏதும் தெரியவில்லை என்றாலும் ,இயேசு கிறிஸ்துவைப் பற்றி தெரிந்துகொள்வதில் ஆர்வமாய் இருந்தேன் . ஆதாம் இறைவனை புறக்கணித்த போதும் அவனை தொடர்ந்து இறைவன் அழைத்தது போல எனக்கும் இந்த இறை அழைப்பு இருப்பதாக உணரமுடிந்தது.

உண்மையும் உயிரும் உள்ளது திருவிவிலியம் என்பதை RCIA வகுப்புவழி கற்றுக்கொண்டேன். எனக்காக கடவுள் மனிதனானார் , அவர் பாவிகளை தேடி வந்தார் என்பதை தெரிந்து கொண்டேன். பாவத்தைவிட்டு தூய வாழ்வை தேர்ந்துகொள்ள விசுவாசம் எனும் மாபெரும் கொடையை இயேசு எனக்கு வழங்குகிறார் என்பதை புர்து கொண்டேன் . திருமுழுக்கு அருட்சாதனம் வழி என்னைத் தன் பிள்ளையாக தெரிந்துகொண்டார். இயேசு ஆண்டவர் மற்றெல்லா அருட்சாதனங்கள் வழியும் என்னை தன் அருளால் வழி நடத்துவார் என விசுவசிக்கிறேன்.

**Ester- புனித லூர்து அன்னை பங்கு, கிள்ளான்**



நான் செந்துறலில் பிறந்து வளர்ந்தேன். திருமணம் செய்தது எல்லாம் இந்துவில்தான். என் கணவரும் மூன்று பிள்ளைகளும் இந்துதான். எங்கள் வாழ்வு செய்வினை சூழ்ச்சியில் சிக்கிச் சின்னாப்பின்னமாகி இருந்தது. எனது அக்காள் மூலம் ஆண்டவரை அறிந்து கொண்டு, மன்றாட தொடங்கினேன். அவ்வேளையில் கிள்ளான், புனித லைர்து அன்னை பங்கைச் சேர்ந்த சகோதரர் யேசுதாஸ் அந்தோணிசாமி அவர்களுடன் தொடர்பு கொண்டு, RCIA பயிற்சியில் கலந்து கொண்டேன். இடையில் பிரச்னைகள் தடைக்கல்லாக வந்தன. ஆயினும் உறுதியான மனநிலையோடு, ஆண்டவரில் தொடர்ந்து நீடித்திருக்க முடிவு செய்தேன். இன்று மகிழ்கிறேன் ஆண்டவர் இயேசுவுக்குச் சொந்தமானேன்.

**Danica Hanupriya, திருஇருதய ஆண்டவர் பங்கு, கூலிம்**



நான் ஆண்டவரை விசுவசிக்கிறேன். நான் நிறைய அர்த்தங்களை இந்த வகுப்பு வழியாக தெரிந்து கொண்டேன், இன்னமும் கற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த வகுப்பின் மூலமாக நான் ஆண்டவரை உணரமுடிந்தது. எங்களுக்கு இந்த வகுப்பு கற்று கொடுத்தவர்களுக்கு மிக நன்றி. அவர்கள் எங்களை சரியான முறையில் வழி நடத்தினர்.

**Mani Sheela Maria, மீனவுதல் அன்னை பங்கு, சிரம்பான்**



திருமுழுக்கு பெறும் நாளை ஆவலோடு எதிர்ப்பார்த்திருந்தேன். எனது கணவர் ஓர் இந்து. எனது தாயார் ஒரு கத்தோலிக்கர். எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். திருமுழுக்குப் பெற்று ஆண்டவரின் திருவுடலை பெற்ற அன்றைய பொழுது மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன். ஒரு வருட RCIA பயணம் எனக்கு நல்ல பலனைக் கொடுத்தது. ஆண்டவர் இயேசுவுக்குச் சொந்தமானவராக என்றும் நிலைத்து வாழ்வேன்.

## இயேசுவே இறைமகன் நம்புவோம்! வாழ்வு பெறுவோம்!

இன்று பாஸ்கா கால இரண்டாம் வாரத்தில் இறைஇரக்க ஞாயிறு கொண்டாட்டத்தில் இணைகிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் பேதுருவின் நிழல் பட்டதாலேயே குணம் பெற்றார்கள் என்று லூக்கா பதிவு செய்துள்ளார். அதே வேளையில் நற்செய்தி வாசகத்தில் திருத்தூதர் தோமாவின் விருப்பத்தை புரிந்து இரக்கத்துடனே அவரிடம் காயங்களை காட்டி நம்ப அழைக்கின்றார் ஆண்டவர். இறைவன்மீது நம்பிக்கை வைத்து வாழ்தல் என்பது வெறுமனே அவரை வழிபடுவதோடு நின்றுவிடக்கூடிய ஒன்று அல்ல. மாறாக அவருக்காக, அவராகவே வாழ்தல் ஆகும். இதனால் நாம் பல்வேறு துன்பங்களையும், வேதனைகளையும் சந்திக்க நேரிடும்.

திருத்தூதர் யோவான் எழுதிய திருவெளிப்பாட்டு நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய இரண்டாம் வாசகத்தில் அவர் கூறுகிறார், "நான் கடவுளின் வாக்கை அறிவித்து, இயேசுவுக்குச் சான்று பகர்ந்ததால் பத்மு தீவுக்கு வர நேர்ந்தது" என்று. ஆம், தூய யோவான் கடவுளின் வாக்கை எடுத்துரைத்த ஒரே காரணத்திற்காக நாடு கடத்தப்படுகின்றார். யோவானைப் போன்றுதான் பல புனிதர்கள், மறைசாட்சிகள், இறையடியார்கள் நாடு கடத்தப்பட்டார்கள், பல்வேறு சித்ரவதையை அனுபவித்தார்கள். ஆனாலும் அவர்கள் தாங்கள் கொண்ட நம்பிக்கையில் மனம் தளரவில்லை.

இறைவன் மீது உள்ள நம்பிக்கையில் நாளும் நாம் வளரவேண்டும். எசாயா புத்தகம் 40:31ல் வாசிக்கின்றோம், "ஆண்டவர் மீது நம்பிக்கை வைப்போர் புதிய ஆற்றல் பெறுவர்" என்று. ஆதலால் நாம், நமக்குப் புதிய ஆற்றலைத் தரும் இறைவன் மீது ஆழமான நம்பிக்கை வைத்து வாழ முன்வரவேண்டும்.

யூதர்கள், இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றதைப் பார்த்துவிட்டு, எங்கே தங்களையும் அவர்கள் பிடித்துக் கொன்றுவிடுவார்களோ என்று பயந்து, சீடர்கள் தாங்கள் இருந்த அறையின் கதவை மூடிவைத்திருந்தார்கள் (யோவா 20:1) இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, தன்னுடைய சீடர்களுக்குத் தோன்றியபொழுது, அவர்கள் ஏதோ ஆவியைக் கண்டதுபோல் திகிலுற்றதை (லூக் 2437-39) நினைவூட்டுவதாக இருக்கின்றது. ஓர் ஆவியை கண்டதுபோல் திகிலுற்று இருந்தவர்களிடம் இயேசு, அவர்களுக்கு முன்பாகத் தோன்றி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று வாழ்த்துகின்றார்.

இயேசு உயிர்த்து, தன்னுடைய சீடர்களுக்குத் தோன்றியபோது, தன்மீது அவர்கள் நம்பிக்கைகொள்ளவில்லை என்றோ, தன்னை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்றோ அவர்களைத் திட்டவில்லை. மாறாக, 'அமைதி உரித்தாகுக' என்ற ஆறுதல் அளிக்கும் வார்த்தைகளைப் பேசுகின்றார். அதுமட்டுமல்லாமல், தூய ஆவியாரை அவர்மேல் ஊதி, தன்னுடைய பணியைச் செய்ய மீண்டுமாக அவர்களை அழைக்கின்றார். இவ்வாறு இயேசு பயந்துகொண்டிருந்த சீடர்களுக்கு அபயம் தந்து – துணிவைத் தந்து – வல்லமையோடு பணியைச் செய்ய வழி வகுக்கின்றார். இந்நிகழ்விற்குப் பிறகு சீடர்கள் புதிய உத்வேகத்துடன் செயல்பட்டதைக் கொண்டே இயேசு தன் சீடர்களுக்கு தந்த அபயம், துணிவு எத்துணை உயர்ந்தது என்பதை புரிந்துகொள்ளலாம்.

யோவான் நற்செய்தியாளர் தன்னுடைய நற்செய்தி நூலின் வழியாக, இயேசுவை இறைமகன் என ஒவ்வொருவரும் நம்பி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற செய்தியைத் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறுகின்றார்.

'என் ஆண்டவரே, என் தேவனே' என்று துணிவுடன் அறிக்கையிட்டார் திருத்தூதர் தோமா. புனித தோமாவின் விசுவாச அறிக்கை நம் ஒவ்வொருவரின் விசுவாச வாழ்வுக்கு முன்னோட்டமாகட்டும். உயிர்த்த இயேசுவை நம் ஊனக்கண்களால் காணாவிட்டாலும் நம்புவோம். பேறுபெற்றவர்களாவோம். '

த. ஜோசப் சகாய ஆனந்த், புனித சவேரியார் தேவாலயம், மலாக்கா.

**பாஸ்கா காலம் 2-ஆம் ஞாயிறு**

முதல் வாசகம்: திப. 10: 34, 37-43
தி. பாடல்: 118: 1-2, 16-17, 22-23
2ம் வாசகம்: கொலோ 3: 1-4
நற்செய்தி: யோவான் 20: 1-9

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**